# சாரணியம் வாழ்க!

## நேற்றைய தொடர்ச்சி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசில் சென்னை பன்னாட்டு புத்தகக் கண்காட்சி, F4 கார் பந்தயம், செஸ் ஒலிம்பியாட் போன்ற நிகழ்ச்சிகளுக்கு பன்னாடுகளைச் சேர்ந்தவர்களும் தமிழ்நாட்டிற்கு வருகை புரிந்து பாதுகாப்பாகவும், மகிழ்ச்சியாகவும் தங்கள் நாடுகளுக்கு திரும்பி சென்றார்கள். அதே போலவே இவ்விழாவிற்கு வருகை புரிபவர்கள் பாதுகாப்பான மனநிலையோடு திரும்ப வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தோம்.

2000ஆம் ஆண்டில் சென்னை மாநகரில் பொன்விழாவை நடத்தி பெருந்திரளணி குறித்து எங்களுக்கு வழிகாட்டிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் புகழ் போற்றும் வகையில் முதல் அரங்கமாக 'முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நினைவு புகைப்படக் கண்காட்சி' அரங்கத்தை அமைத்திருந்தோம். அரங்கத்தின் முகப்பில் கலைஞர் அவர்களின் முழுவுருவச் சிலை வைக்க வேண்டும் என முடிவெடுத்தோம். உடனடியாக சிலை தேவைப்பட்டது. அந்நேரத்தில் ஈரோடு தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர்-மாண்புமிகு அமைச்சர் அண்ணன் திரு.முத்துசாமி அவர்களிடம் இதுகுறித்து தெரிவித்தபோது 'கலைஞர் 100' நிகழ்ச்சிக்காக வடிவமைக்கப்பட்டு தன்னிடம் இருந்த சிலையை உடனடியாக பெருந்திரளணி முகாமிற்கு அனுப்பி வைத்தார். ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் பணிகளில் முழுமையாக ஈடுபட்டிருந்தாலும் நான் கேட்டுகொண்டதற்காக சிலையை அனுப்பி வைத்து கலைஞர் புகழ் போற்றினார் மாண்புமிகு அமைச்சர் அண்ணன் திரு.முத்துசாமி அவர்கள்.

ஜனவரி 28ஆம் தேதி நண்பகலில் விழாவின் தலைவர்-மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திருச்சி வருகை புரிந்தார். அவரை விமான நிலையத்தில் வரவேற்று முகாமின் சிறப்புகள் குறித்து எடுத்துரைத்தேன்.

மாலை 5 மணியளவில் வருகை புரிந்த மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள், முகாமின் தொடக்கத்தில் நிறுவப்பட்டிருந்த முத்தமிழறிஞர் கலைஞர் சிலைக்கு மலர்தூவி மரியாதை செலுத்தி விழாவினைத் தொடங்கிவைத்தார். கலைஞர் நூற்றாண்டு நினைவு புகைப்படக் கண்காட்சி அரங்கத்தினைத் திறந்துவைத்து சிறப்பித்தார்.

விழா மேடைக்கு வருவதற்கு முன்பாக சாரணர் கொடியேற்றியும், 20000க்கும் மேற்பட்ட சாரணர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டும் சிறப்பித்தார். வைரவிழா தீபத்தை ஏற்றி வைத்து சாரணர்களின் வைரவிழாவைத் தொடங்கிவைத்தார் விழாவின் தலைவர் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள்.

பாரத சாரண - சாரணிய இயக்க வைரவிழா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு பெருந்திரளணியின் தொடக்க விழா நிகழ்வானது, 7 பிரிவுகளின் கீழ் "எலைட் உலக சாதனை"க்கு(Elite World Record) தேர்வாகி இருந்தது.

● **சாரண - சாரணிய இயக்கப் பாடலுக்கு ஒரே இடத்தில் பெருமளவிலான பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டது.**

● **Reef knot-tying எனும் செயல்முறையை ஒரே நேரத்தில் பெருமளவிலான சாரண - சாரணியர் செய்து காட்டியது.**

● **பெருமளவிலான பங்கேற்பாளர்கள் சாரண - சாரணிய இயக்க உறுதிமொழியை ஒரே நேரத்தில் எடுத்துக் கொண்டது.**

● **சாரண - சாரணிய இயக்கத்தின் பிரத்யேக சல்யூட்-ஐ ஒரே நேரத்தில் பெருமளவிலான பங்கேற்பாளர்கள் செய்தது.**

● **சாரண - சாரணிய இயக்கத்திற்கே உரிய இடது கைகுலுக்கலை ஒரே நேரத்தில் பெருமளவிலான பங்கேற்பாளர்கள் மேற்கொண்டது.**

இந்த 5 சாதனைக்கான சான்றிதழ்களை விழாவின் தலைவரிடம் வழங்கி வாழ்த்துகள் பெற்றோம். மீதம் 2 சாதனைகளை நிறைவு விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் வழங்கினோம்.

'2000ஆம் ஆண்டில் பொன்விழாவை தமிழ்நாட்டில் நடத்திய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வைரவிழாவை நடத்துகிறார். அவரின் ஆணையை ஏற்று இந்த விழாவை வெற்றி விழாவாக கொண்டாடுவோம்' என உரையாற்றி மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் முன்னால் உறுதியேற்றோம்.

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் உரையாற்றும்போது **'கலைஞர் அவர்கள் கொண்டுவந்த சமத்துவபுரங்களைப் போலவே, இந்த முகாமில் பல்வேறு மொழி சார்ந்தவர்களும், இனங்களைச் சார்ந்தவர்களும் ஒன்றாக வாழப் போகிறீர்கள். உங்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துகள்'** என்றார்.

அவரது வாழ்த்துகளுக்கும், வழிகாட்டுதலுக்கும், வருகை புரிந்தமைக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டோம்.

புறப்படுவதற்கு முன்பாக சாரண சாரணியர் இயக்கத்தின் கையெழுத்து இயக்கத்தையும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் தொடங்கிவைத்து சிறப்பித்தார்.

தனிப்பட்ட முறையில் அவர் என்னிடம் சொன்ன அறிவுரை என்பது 'தினமும் முகாமிற்கு நீ செல்ல வேண்டும். அதுதான் நமது திராவிட மாடல் அரசிற்கு புகழைத் தேடித் தரும்' என்றார். அவரின் ஆணையை ஏற்று தினமும் வைரவிழா முகாமிற்கு செல்வதை வழக்கமாக கொண்டிருந்தேன்.

தொடக்க விழாவிற்கு வருகை புரிந்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் புகழ் போற்றிய மாண்புமிகு கர்நாடக மாநில துணை முதலமைச்சர் திரு.டி.கே.சிவக்குமார் அவர்களுக்கும், மாண்புமிகு கர்நாடக சட்டமன்ற சபாநாயகர் திரு.யூ.டி.காதர் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டோம்.

தொடக்க நாள் நிகழ்வில் பாரத சாரண சாரணியர் இயக்கத் தலைவர் முனைவர் திரு.அனில்குமார் ஜெயின் அவர்களும் கலந்துகொண்டு, தமிழ்நாடு தொல்லியல் அரங்கத்தை திறந்துவைத்து சிறப்பித்தார். சாரணர் இயக்கத்தில் பங்காற்றிய பல்வேறு துறை சார்ந்த ஆளுமைகளையும், சாரணர் இயக்கத்தின் பெருமைகளை யும் பறைசாற்றும் விதமாக அமைக்கப்பட்டிருந்த சாரணர் அரங்கத்தை சாரணர் இயக்கத்தின் நிறுவனர் திரு.பேடன் பவுல் அவர்களின் 5ஆம் தலைமுறை திரு.டேவிட் ரோபர்ட் பேடன் பவுல் அவர்கள் திறந்துவைத்து சிறப்பித்தார்.



இரண்டாம் நாளில் சாரணர்களுடன் இணைந்து முகாமிலேயே உணவருந்தினோம். அவர்களுக்கு வழங்கப்படும் உணவின் தரம் குறித்து ஆய்வு செய்தோம். பல்வேறு இனத்தைச் சேர்ந்தவர்கள் வந்திருந்த காரணத்தால், அவர்களின் கலாசாரத்தின்படி அவர்களுக்கான பிரத்யேக உணவுக் கூடங்களும் அமைக்கப்பட்டிருந்தது. அவர்களின் உணவுக் கூடங்களுக்குச் சென்று அவர்களின் அன்பையும், அவர்களின் உணவையும் பெற்றுக்கொண்டோம்.

Adventure and Fun Based Activities எனச் சொல்லக்கூடிய சாகசப் பயிற்சிகளுக்கான தளங்களும் முகாமில் அமைக்கப்பட்டிருந்தது. இதற்காக 72 தளங்கள் அமைக்கப்பட்டிருந்தது. Planks Bridge, Monkey Bridge, Beam Climbing, Tyre Tunnel, Fire Ditch, Gun Shooting, Ring Throw போன்ற பயிற்சிகளில் சாரணர்கள் ஈடுபட்டார்கள். இந்தத் தளத்திற்குச் சென்று பயிற்சிகளில் ஈடுபட்டிருந்த மாணவச் செல்வங்களைப் பாராட்டி ஊக்கப்படுத்தினோம்.

**முகாமில் Global Village எனும் அரங்கம் அமைக்கப்பட்டிருந்தது. தொடக்க விழாவில் மாண்புமிகு அமைச்சர் அண்ணன் திரு.கே.என்.நேரு அவர்கள் இவ்வரங்கத்தைத் திறந்து வைத்திருந்தார். ஐ.நா.சபையால் அறிவிக்கப்பட்டிருந்த 17 இலக்குகளை (SDG-Sustainable Development Goals) விவரிக்கும் வகையிலான அரங்கம்தான் Global Village. மேலும் நீடித்த மற்றும் நிலையான உலகை கட்டமைப்பதற்கு ஐ.நா.சபையால் அறிவிக்கப்பட்டிருந்த இந்த 17 இலக்குகளை அடைவதற்காக திராவிட மாடல் அரசு செயல்படுத்திக்கொண்டிருக்கும் திட்டங்களைப்பற்றியும் இந்த அரங்கத்தில் விவரிக்கப்பட்டது. வளமான உலகை உருவாக்குவதற்கான வழிமுறைகளை சாரணர்களுக்கு கற்பிக்கும் இந்த அரங்கத்தையும் பார்வையிட்டோம். Astro எனப் பெயரிடப்பட்டிருந்த இயந்திரம்(ரோபோட்) கை குலுக்கி மகிழ்ச்சியோடு வரவேற்றது அனைவரையும் கவர்ந்தது. இவ்வரங்கத்தில் மகாத்மா காந்தியடிகள், தந்தை பெரியார், பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கர், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், டாக்டர் அப்துல்கலாம் போன்ற தலைவர்களின் சிலைகளையும் அமைத்திருந்தோம்.**

**அன்பில் மகேஸ் பொய்யாமொழி**
அமைச்சர்
பள்ளிக் கல்வித்துறை
தமிழ்நாடு அரசு



இந்நிகழ்விற்கு 44க்கும் மேற்பட்ட சாரண மாநிலங்களில் (Scout States) இருந்து ஆயிரக்கணக்கான சாரணர்கள் வருகை புரிந்திருந்தார்கள். அனைத்து மாநில சாரணர்களையும் ஒருங்கிணைத்து அவர்களுக்கான அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக அணித்தலைவர்கள் (Contingent) நியமிக்கப் பட்டிருந்தார்கள். அந்த அணித்தலைவர்களுடனான ஆய்வுக் கூட்டத்திலும் கலந்துகொண்டு உரையாற்றினோம். அனைத்து மாநிலங்களைச் சேர்ந்த அணித்தலைவர்களும் நமது திராவிட மாடல் அரசுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டார்கள்.

ஹரியானா தின விழாவில் இயக்கத்தின் தேசிய ஆணையர் கே.கே.கந்தேல்வால் அவர்களுடன் இணைந்து கலந்துகொண்டோம். அம்மாநில முறைப்படி சாரணர்கள் வரவேற்பு அளித்து, கலை நிகழ்ச்சிகளின் மூலமாக தங்களின் பண்பாட்டை வெளிப்படுத்தினார்கள். அவர்களுக்கு நன்றிகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்து உரையாற்றினோம்.

பன்னாடுகளைச் சேர்ந்த சாரணர்களுடனும், தூய்மைக் காவலர்களுடனும் இணைந்து உணவு உட்கொண்டு கலந்துரையாடினோம். தூய்மைக் காவலர்களின் பணி என்பது போற்றுதலுக்குரியது. 1000க்கும் மேற்பட்ட தூய்மைக் காவலர்கள் சேவையாற்றினார்கள். அதிகாலை 3 மணிக்கு தொடங்கும் தங்களின் பணியை இரவு வரையிலும் செய்துகொண்டிருந்தார்கள். அவர்களுக்கு நன்றிகள் தெரிவித்து, குழுப் புகைப்படங்களும் எடுத்துக்கொண்டோம்.

காலை நேரங்களில் சாரண மாணவ மாணவச் செல்வங்களோடும், மதிய உணவை தூய்மைக் காவலர்களுடனும் இணைந்து உட்கொண்டோம். உணவருந்தி கலந்துரையாடியதோடு மட்டுமல்லாமல் உணவின் தரம் குறித்தும், அடிப்படை வசதிகள் குறித்தும் அவர்களின் கருத்துகளையும் கேட்டறிந்தோம். பன்னாடுகளில்இருந்துவருகைபுரிந்திருந்தசாரணர்களோடு இரவு உணவு உட்கொண்டு கலந்துரையாடினோம். தாங்கள் இதற்கு முன்னர் சென்ற பெருந்திரளணி குறித்தும், தற்போதைய பெருந்திரளணி குறித்தும் தங்களின் கருத்துகளைத் பன்னாடுகளைச் சேர்ந்த சாரணர்கள் பகிர்ந்துகொண்டார்கள்.

பகல் நேரங்களில் அணிவகுப்புகளிலும், சாகசப் பயிற்சிகளிலும் ஈடுபடும் சாரணர்கள் இரவு நேரங்களில் தங்களின் பண்பாட்டை எடுத்துரைக்கும் விதமாக நடைபெற்ற கலை நிகழ்ச்சிகளிலும் பங்கு பெற்றார்கள். அந்தக் கலை நிகழ்ச்சிகளிலும் பங்கேற்று மாணவர்களுக்கும், பயிற்சியாளர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டோம்.

**பிற மாநிலத்தவர்கள் தங்கியிருந்த கூடாரங் களுக்கும், கண்காணிப்பு அறைகளுக்கும், சந்தைப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த கடைகளுக்கும் நேரடியாக சென்று பார்வையிட்டோம். பிற மாநிலத்தவர்கள் உரையாற்றும் போது 'Very Nice Sir, Great Sir...' எனும் வார்த்தைகளை அதிகம் பயன்படுத்தினார்கள். 'அனைத்துப் புகழும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு தான்...' என அவர்களிடம் உரையாற்றி நன்றிகளைத் தெரிவித்தோம்.**

ஜனவரி 30 மகாத்மா காந்தியடிகள் அவர்களின் நினைவு நாள் அன்று அனைத்து மாநில அணிகளில் இருந்தும் ஒரு சாரணரை Global Village அரங்கத்திற்கு வரவழைத் தோம். அங்கு அமைக்கப் பட்டிருந்த மகாத்மா காந்தியடிகளின் சிலைக்கு மலர்தூவி மரியாதை செலுத்தி அனைத்து மாநில சாரணர்களுடன் இணைந்து 'வேற்றுமையில் ஒற்றுமை காண்போம். மதம், சாதி வேறுபாடுகளை களைந்து, தீண்டாமை ஒழிப்போம்' என உறுதிமொழி எடுத்துக் கொண்டோம்.

அதே நாளில் மணப்பாறை நகரில் 'தேசிய ஒற்றுமை விழிப்புணர்வுப் பேரணி' நடத்தினோம். பல்வேறு கலாச்சாரங்களைக் கொண்டோர்கள் ஒன்றாக இணைந்து இந்தப் பேரணியில் கலந்துகொண்டார்கள். முன்னாள் பிரதமர் திரு.ஜவகர்லால் நேரு அவர்களின் சிலையில் இருந்து தொடங்கிய இந்தப் பேரணி 5 கி.மீ. தூரம் பயணித்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிலையில் நிறைவு பெற்றது.

இதற்கிடையே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலந்துகொள்ளவிருந்த நிறைவு விழாவிற்கான முன்னேற்பாட்டுப் பணிகள் குறித்தும் ஆய்வு மேற்கொண்டோம்.

பிப்ரவரி 2ஆம் தேதி நண்பகலில் திருச்சி வருகை புரிந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை திருச்சி விமான நிலையத்தில் வரவேற்று மகிழ்ந்தோம். மாலை 5 மணியளவில் வைரவிழா முகாமிற்கு வருகை புரிந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு Scarf அணிவித்து வரவேற்றோம். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கையெழுத்திட்டு தொடங்கி வைத்த கையெழுத்து இயக்க பதாகையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் **'வாழ்க சாரணியம்'** என எழுதி வாழ்த்துகள் தெரிவித்தார்.



விழா மேடையில் தோன்றிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு 20,000 சாரணர்களும் சாரணர் வணக்கம் செலுத்தி ஆரவாரத்தோடு வரவேற்றார்கள்.

'பாரத சாரண சாரணியர் இயக்கத்தின் பொன்விழாவை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நடத்தினார். வைரவிழாவை மாண்புமிகு முதலமைச்சராகிய தாங்கள் நடத்தியுள்ளீர்கள். இதன் நூற்றாண்டு விழாவையும் திராவிட மாடல் அரசுதான் நடத்தும்' என்ற நம்பிக்கையை தெரிவித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து உரையாற்றினேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சாரண இயக்கத்தி னரின் உழைப்பை அங்கீ கரிக்கும் விதமாக **'4 இலட்சமாக இருந்த சாரணர்களின் எண்ணிக்கையை 12 இலட்சமாக உயர்த்தி உள்ளார் தம்பி அன்பில் மகேஸ் பொய்யாமொழி'** என உரையாற்றினார். செயற்குழுக் கூட்டத்தில் நாங்கள் நிறை வேற்றிய 'சாரணர்களின் எண்ணிக்கையை உயர்த்து வோம்' எனும் தீர்மானத்தை, வெற்றிகரமாக நடைமுறைப் படுத்தியதை அறிந்துகொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனது உரையில் தெரிவித்து பாராட்டியது எங்களுக்கு பெருமகிழ்ச்சியை அளித்தது.

மேலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் **'தமிழ்நாடு பாரத சாரண சாரணியர் இயக்கத்திற்கான தலைமையகம் ரூ.10 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்'** என்ற அறிவிப்பை வெளியிட்டு ஒட்டுமொத்த சாரணர்களையும் மகிழ்ச்சி கடலில் ஆழ்த்தினார். அந்த அறிவிப்பை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிக்கும் போது சாரணர்கள் கொண்டாட்டத்தோடு வணக்கம் செலுத்தினார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சாரணர்களோடு 'செல்ஃபி' எடுத்துக்கொண்டது அனைவரையும் உற்சாகப்படுத்தியது. நிறைவு விழாவில் விழாவின் துணைத் தலைவரும் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சரு மான திரு.கோவி.செழியன் அவர்களும், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு.சிவ. வீ.மெய்யநாதன் அவர்களும், கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

எனது அரசியல் ஆசான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வீற்றிருந்த அதே மேடையில், தேசிய ஆணையர் திரு.கே.கே.கந்தேல்வால் அவர்கள் உரையாற்றும் போது **'அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களுக்கு சாரணர் இயக்கத்தின் உயரிய விருதான வெள்ளி யானை விருது (Silver Elephant Award) வழங்கப்படும்'** என அறிவித்தார். எனது ஆசான் அவர்களின் முன்னால் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டதில் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தேன். இந்த விருதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், விழாவின் தலைவர்-மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், தமிழ்நாட்டின் அனைத்து சாரணர்களுக்கும் சமர்ப்பிக்க காத்திருக்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மனநிறைவோடு விழா மேடையில் இருந்து விடைபெற்றார்கள். நான் நேராக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிலை அமைந்திருந்த இடத்திற்குச் சென்றேன். பொன்விழாவை நடத்தி எங்களுக்கு வழிகாட்டிய கலைஞர் அவர்களுக்கு உணர்ச்சிப் பெருக்கோடு சாரணர் வணக்கம் செலுத்தினேன்.

சாரணர் விதிமுறைகளின்படி கடைசி நாளில் கொடி இறக்கப்பட்டது. இறுதி நாளில் விழாவின் நினைவாக அஞ்சல் அட்டை வெளியிட்டு, அஞ்சலக அலுவலர்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டோம். அடுத்த பெருந்திரளணி நிகழ்வை சண்டிகர் மாநிலம்தான் நடத்தவுள்ளது. அதனால் அவர்களிடம் விழா ஒளிச்சுடரை வழங்கி வாழ்த்துகள் தெரிவித்தோம்.

Chief Commissioner Scout Wing, Chief Commissioner Guide Wing, and Overall Performance Championship போன்ற விருதுகளை இராஜஸ்தான் மாநிலம் தட்டிச் சென்றது. அவர்களுக்கு விருதுகளை வழங்கி வாழ்த்துகள் தெரிவித்தோம்.

அனைத்து மாநிலங்களைச் சேர்ந்த சாரண அணித் தலைவர்களுக்கும், நமது மாநில சாரணர்களுக்கும், விழாவை வெற்றிகரமாக நடத்த உழைத்த அரசு அலுவலர்களுக்கும், பணியாளர்களுக்கும் நினைவுப் பரிசுகள் வழங்கி நன்றிகளைத் தெரிவித்தோம்.

விதிகளை பின்பற்றி இறக்கப்பட்ட சாரணர் கொடி என்னிடம் வழங்கப்பட்டது. மிகுந்த மரியாதையோடும், பெருமிதத்தோடும் சாரணர் கொடியினைப் பெற்றுக் கொண்டேன்.

'வேற்றுமையில் ஒற்றுமை' கண்ட "பாரத சாரண சாரணியர் இயக்க வைரவிழா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நினைவு பெருந்திரளணி" நிகழ்வின் வெற்றிக் கொடி திராவிட மாடல் அரசின் பெருமையை எடுத்துச் சொல்லும்.

**2422 கூடாரங்கள், 2100 கழிப்பறைகள், 2000 குளியலறைகள், 4 சாதனை அரங்கங்கள், 24 மாநிலங்கள், 4 வெளிநாடுகள், 20,000க்கும் மேற்பட்ட சாரணர்கள், 7 உலக சாதனைகள் என பெருமைப்படும் அளவிற்கான இந்த வெற்றி என்பது பொன்விழாவை நடத்திக்காட்டிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வெற்றி!**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வெற்றி!**

**மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் வெற்றி!**

**தமிழ்நாடு சாரணர்களின் வெற்றி!**

**அரசு அலுவலர்களின் வெற்றி!**

**இந்த வெற்றி என்பது திராவிட மாடல் அரசின் வெற்றி!**

ஒன்றிய அரசு தமிழர்களையும், தமிழ்நாட்டையும் புறக்கணித்தாலும் தனது மக்களை அன்பால் அரவணைத்துச் செல்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். இந்த வைரவிழா போல தமிழ்நாடு நிகழ்த்திக்கொண்டிருக்கும் சாதனைகளுக்கு தனியொரு மனிதர் மட்டுமே காரணமாவார். அவர் நமது தமிழ்நாட்டின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மட்டுமே எனும் போது சாரணர் இயக்கத்தின் நிறுவனர் திரு.பேடன் பவுல் அவர்களின் துணிச்சலான நிகழ்வு ஒன்று நினைவுக்கு வருகிறது.

சாரணர் இயக்கத்தின் நிறுவனர் திரு.பேடன் பவுல் அவர்கள் பிரிட்டிஷ் ராணுவத்தில் இணைந்து தென்னாப்பிரிக்கா நாட்டில் பணியாற்றிக் கொண்டிருந்தார். அப்போது Metabale எனும் பகுதியில் இவருக்கு பணி ஒதுக்கப்பட்டிருந்தது. அச்சமயத்தில் அப்பகுதியில் உள்ள காடுகளில் மறைந்திருந்த பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு எதிராக கலகம் செய்த எதிரிகளின் இடங்களை கண்டுபிடிப்பதற்காக, அப்பகுதி ஊர்காரர் ஒருவரை அழைத்துக் கொண்டு காட்டு வழியாக பயணம் ஆனார். அந்த ஊர் மனிதர் எதிரிகள் பதுங்கி உள்ள இடங்களை அடையாளம் காண்பிப்பார் என்று நினைத்து கூட்டிச் சென்றார். ஆனால் அந்த மனிதன் ஒரு வித்தியாசமான மனிதராக இருந்தார். ஒருவிதமான விதையை கையில் வைத்துக்கொண்டு காட்டு வழியாக செல்லும் பாதையில் ஒவ்வொன்றாகத் தூவிக்கொண்டே வந்தார். இது பேடன் பவுல் அவர்களுக்கு வித்தியாசமான செய்கையாகத் தோன்றியது. அவருக்கு சந்தேகத்தையும் ஏற்படுத்தியது. இவர் எதிரிகளின் ஆள் என்பதை அறிந்து கொண்ட இயக்கத்தின் நிறுவனர், அந்த மனிதரை ஏமாற்றிவிட்டு அந்த வனாந்தரத்தில் தனி ஆளாக தப்பித்தார். மிகப்பெரிய காட்டில் வழி தெரியாமல் தவித்த பேடன் பவுல் தனது அறிவு கூர்மையால் திறமையால் இராணுவ தலைமை இடத்திற்கு ஒருவழியாக வந்து சேர்ந்தார்.

அதேபோல இந்திய ஒன்றியம் எனும் பன்முகத்தன்மை கொண்டஅழகானவனத்தில்வஞ்சகத்தால்தனித்துவிடப்பட்ட தமிழ்நாட்டை, தனி ஆளாக நின்று தனது நிர்வாகத் திறமையினாலும், போர் குணத்தாலும் காப்பாற்றி வருகிறார் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்.

**"ஆகமொத்தம் கழகத் தலைவர்-மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திராவிட மாடல் அரசின் ஒருநாள் மாநாடாக அல்லாமல், ஏழு நாள்கள் நடைபெற்ற பிரமாண்ட திராவிட மாடல் மாநாடாக இந்த நிகழ்வு நடந்து முடிந்தது" என இந்த வைரவிழாவை உற்றுநோக்கியவர்களும், பொதுமக்களும், கழகத் தோழர்களும் தெரிவித்தார்கள். இந்த வார்த்தைகள்தான் எங்களின் பெருமையாக அமைந்தது.** ●